S.T C. No. : 594/2023

PW1 : லட்சுமணன் த.பெ. குருசாமி

Date : 18.09.2024

**குறுக்கு விசாரணை**

1. நான் அரன்மனைப்புதுூரை சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மகன் மணிகண்டன் என்பவரின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொந்த ஊர் பேரையூர் தாலுகாவில் உள்ளது. எனக்கு எதிரியை கோயம்புத்தூரில் வேலை செய்யும் போது பழக்கம். நான் கடந்த 2022ம் ஆண்டு 8ஆவது மாதத்தில் இருந்து ஒரு வருடம் மேற்படி வேலையில் கோயம்புத்தூரில் செய்து வந்தேன். திண்டுக்கலை சேர்ந்த சேவீரபாண்டியன் என்பவர் என்னை வேலைக்கு கூட்டிச்சென்றார். கோயம்புத்தூரில் எந்த இடத்தில் வேலைப்பார்த்தேன் என்றால் ஒவ்வவொரு நாளும், ஒவ்வொரு இடத்தில் வேலை பார்த்தோம். எந்த இடம் என்று சரியாக தெரியவில்லை. நான் வேலை செய்யும் போது உக்கடம் பேருந்து நிலையம் அருகே தகரசெட் தரையில் தங்கியிருந்தேன். நான் ஒருவருடமாக வேலை பார்த்துவிட்டு, எந்த இடத்தில் வேலை பார்த்தேன் என்று தெரியாதா என்றால் ஒவ்வவொரு நாளும், ஒவ்வொரு இடத்தில் வேலை பார்த்தோம். எந்த இடம் என்று சரியாக தெரியவில்லை. எனக்கு ஒருநாள் 1500 ரூபாய் சம்பளம் கிடைக்கும். மேற்படி சம்பளத்தை நான் கையில் வைத்திருப்பேன். எனக்கு வங்கி கணக்கு உள்ளது. மேற்படி எனது சம்பளத்தை தேவைப்படும் போது வங்கி கணக்கில் செலுத்துவேன். எதிரியை நான் வேலை செய்ய சென்ற முதல் மாதமே எனக்கு பழக்கம். நான் வேலை செய்யும் இடத்திற்கு எதிரி சிமெண்ட் சீட்டுகளை எடுத்து வருவார். பாதாள சாக்கடை வேலைக்கு சிமெண்ட் சீட் தேவையில்லை என்றால் சரியல்ல. சிமெண்ட் சீட் என்பது சிமெண்ட் மோல்டு ஆகும். பாதாளக் சாக்கடை வேலை என்பது வீட்டிலிருந்து பைப் வழியாக சாக்கடையை எடுத்து பெரிய குழியில் சேர்க்கும் வேலை ஆகும். மேற்படி சிமெண்ட் மோல்டை பெரிய சாக்கடைகள் உடைப்பு ஏற்படும் போது பயன்படுத்துவோம். மேற்படி ஒருவருடம் வேலை செய்த காலத்தில் 20 நாட்கள் கோயம்புத்தூரில் வேலை செய்வேன், வேலை இல்லாத நேரத்தில் என் ஊருக்கு வந்துவிடுவேன். எதிரி என்னிடம் 20.04.2023ம் தேதி ரூ.4,00,000த்தை கடன் வாங்கினார். என்னிடம் மேற்படி பணத்தை எங்கள் ஊரில் உள்ள டீக்கடையில் வைத்து வாங்கினார். அப்போது எனது நண்பர் மருதுபாண்டியன் என்பவர் உடனிருந்தார். மேற்படி எதிரி என்னிடம் பணம் கேட்டவுடன் வங்கிக்கு சென்று பணம் எடுத்து வந்தேனா என்றால் இல்லை, கையில் வைத்திருந்தேன். வீட்டில் இருந்து பணத்தை எடுத்து வந்து டீக்கடையில் வைத்து கொடுத்தேன். எதிரி பணம் வாங்கிகொண்டு என் வீட்டிற்கு வராமல் அப்படியே சென்றுவிட்டார் என்றால் சரிதான். எதிரிக்கு நான் எங்கள் ஊரில் டீக்கடையில் வைத்து பணம் கொடுத்ததாகவும், அப்போது மருதுபாண்டியன் உடன் இருந்தார் என்றும், என் மனுவிலோ, நிருபண வாக்குமூலத்திலோ என்றால் சரிதான். எதிரிக்கு எங்கே வைத்து பணம் கொடுத்தேன் என்று என் மனுவிலோ, நிருபண வாக்குமூலத்திலோ என்றால் சரிதான். மேற்படி ரூ.4,00,000ம் நான் சீட்டு போட்டு சேமித்து வைத்தது ஆகும். எனக்கு ஆண்டு வருமானம் ரூ.2,50,000 வரை வரும். எனக்கு ஆண்டு வருமானம்

ரூ.2,50,000 தான் வருகின்றபோது வீட்டு செலவுகள் போக என்னால் ரூ.4,00,000ம் சேமிப்பாக வைத்திருக்க முடியாது என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் தெரிந்த நபரிடம் சீட்டு போட்டேன், அதற்கு ரசீது எதுவும் கிடையாது. நான் சீட்டு போட்டதாகவும், எதிரிக்கு ரூ.4,00,000த்தை கொடுத்ததாகவும், சொல்வது பொய் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வருமான வரி கட்டவில்லை. எதிரியிடம் பழகியதிலிருந்து ஒருநாள் கூட போனில் பேசியதில்லை. என்னுடைய பிராமாண வாக்கு மூலத்தில் எதிரியிடம் பணத்தை பற்றி கேட்டபோது எதிரி சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியிடம் நேரில் சென்று பணத்தை கேட்டேன். எதிரி என்னை பணம் கொடுத்த தேதியிலிருந்து 30 நாட்கள் கழித்து காசோலையை வங்கியில் செலுத்த சொன்னார், நான் 29.05.2023 அன்று காசோலையை வசூலுக்கு போட்டேன். எழுமலை K.V.B வங்கியில் காசோலையை வசூலுக்கு போட்டேன். எதிரி ஒட்டன்சத்திரம் சவுத்இண்டியன் வங்கி காசோலை என்னிடம் கொடுத்தார். காசோலை எண் எனக்கு தெரியாது. எதிரி காசோலையில் தேதி, தொகை அனைத்தும் நிரப்பிதான் என்னிடம் கொடுத்தார். காசோலையில் எதிரி கையெழுத்து போடும்போது நான் மட்டும்தான் இருந்தேன். காசோலையில் எந்த தேதி நிரப்பி இருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை. எதிரிக்கு நான் பணத்தை கைம்மாத்தாகத்தான் கொடுத்தேன். எதிரி எனக்கு வட்டிபோட்டு திருப்பிகொடுப்பதாக என்னிடம் கூறினார். எதிரி வட்டியுடன் திருப்பி தருவதாக சொல்லியுள்ளதால் எதற்கு அவர் ரூ.4,00,000 மட்டும் காசோலையை நிரப்பி வட்டியை சேர்க்காமல் என்னிடம் கொடுக்கவேண்டும் என்றால் வட்டியுடன் சேர்த்து தருவதாக சொன்னார், ஆனால் ரூ.4,00,000 மட்டும்தான் கொடுத்தார். என்னுடைய காசோலை 3ம் தேதியில் திருப்பப்பட்டது. அப்போது நான் எழுமலையில்தான் இருந்தேன். மறுநாள் நான் வங்கிக்கு சென்று ரிட்டன் மெமோவை வாங்கி கொண்டேன். மேற்படி காசோலை திரும்பியவுடன் எதிரியிடம் சென்று கேட்டேனா என்றால் எதிரியின் கைப்பேசி எண் இல்லை, ஊருக்கு சென்று 08.06.2023ம் தேதி விசாரித்தேன், அங்கு அப்படி ஒரு ஆள் இல்லை என்று கூறினார்கள். ஆனால் இவ்வழக்கில் அதே முகவரிக்கு எதிரிக்கு சம்மன் சார்பு செய்து இவ்வழக்கில் எதிரி ஆஜாராகியுள்ளார் என்றால் சரிதான். காசோலை திரும்பியவுடன் 2 நாட்கள் கழித்து வழக்கறிஞரை சந்தித்தேன். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதி நியாபகமில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். பதில் அறிவிப்பு வந்ததை வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். 20.04.2023ம் தேதி எதிரி தமிழ்நாட்டில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் பதில் அறிவிப்பில் எந்த தேதியில் அவரை எப்போது சந்தித்தேன் என்று குறிப்பிட்டு சொல்லும்படி கேட்டுக்கொண்டதற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. எதிரி எனக்கு கடன் உறுதிச்சீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை, காசோலை மட்டும்தான் கொடுத்தார். எதிரி தனது பதில்அறிவிப்பில் என்னிடம் அவர் வாங்கவில்லை என்றும், நான் யார் என்றே அவருக்கு தெரியாது என்றும், வேறுநபருக்கு கொடுத்த காசோலையை நான் மோசடியாக பயன்படுத்தி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்று சொன்னதற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் வேறு வேலை இருந்ததால் அனுப்பவில்லை. எதிரியை எனக்கு தெரியாது என்றாலும், எதிரியை நான் பார்த்தே இல்லை என்றாலும், இந்த வழக்கு போட்டவுடன் நீதிமன்றத்தில்தான் எதிரியை முதன்முதலாக பார்த்தேன் என்றாலும், எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், எதிரி எனக்கு இந்த வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும், மோசடியாக எதிரியின் மீது பொய்யான

வழக்கு தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் அலைபேசி எண் இல்லாமலும், எதிரி பற்றி வேறு எந்த விபரங்களும் தெரியாமலும், எதிரிக்கு நான் ரூ.4,00,000 கடன் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னை வேலைக்கு கூட்டி சென்ற சேவீரபாண்டியன் எனக்கு ஆதரவாக என்னை வேலைக்கு அழைத்து சென்றது பற்றி சாட்சியம் அளிப்பாரா என்றால் சாட்சியம் அளிப்பார். 20.04.2023 அன்று எதிரி எழுமலையில் வைத்து என்னிடம் காசு வாங்கியதற்கு வேறு எந்த தனிநபர் சாட்சியம் இல்லை என்றால் சரிதான்.